DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 45/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | LW1 – PW1 | | | |
| Name | : | சுப்பிரமணியன் | Age | : | 54 |
| S/o | : | கேசவன் | Occupation | : | கன்ஸ்ட்ரக்சன் தொழில் |
| Village | : | இராமநாதபுரம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 08th day of July 2026.

**08.07.2026**

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4 வது எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து கன்ஸ்ட்ரக்சன் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களை எனது தம்பி கோகுலகண்ணன் மூலமாக எனக்கு தெரியும். ஆஜர் எதிரி பாலசந்திரன் என்பவர் அவரது தங்கை திருமணத்திற்காக அவருடைய பட்டிணம்காத்தான் கிராமத்தில் சர்வே எண்.756/5 என்ற 70 செண்ட் உள்ள இடத்தை விற்பனை செய்வதாக எனது தம்பி கோகுலகண்ணன் மூலமாக என்னிடம் கூறினார். எனக்கு முதலில் வாங்க விருப்பமில்லை என்றேன், சாத்தையாவும், பாலசந்திரனும் வற்புறுத்தியதால் நான் சம்மதித்தேன். ஆஜர் எதிரி சாத்தையா பாலச்சந்திரனின் தந்தையாவார்.

மேற்படி இடத்திற்கு செண்ட் ஒன்று-க்கு ரூ.1,30,000/- வீதம் மொத்தம் 70 செண்ட்டிற்கு ரூ.91 இலட்சம் என்று கிரைய தொகை பேசினோம். கடந்த 20.02.2019 ம் தேதி நானும், பாலச்சந்திரனும் ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதி கொண்டு ரூபாய் 5 இலட்சத்தை ரொக்கமாக மேற்படி பாலசந்திரனிடம் அன்றைய தினமே கொடுத்தேன். பாலச்சந்திரனின் தந்தை சாத்தையாவும், எனது தம்பி கோகுலகண்ணன், பூமிநாதன் என்பவரும் அங்கு இருந்தார்கள். கிரைய ஒப்பந்த பத்திரத்திற்கு சாட்சியாக பூமிநாதனும், கோகுலகண்ணனும் கையொப்பம் செய்தனர். மேலும் பலமுறை சாத்தையா, அவரது மகனான ஆஜர் எதிரி தியாகராஜன் ஆகியோர் என்னிடம் ரூ.30 இலட்சம் வரை ரொக்கமாக கொடுத்துள்ளேன். கிரைய ஒப்பந்தத்தில் காட்டப்பட்ட இடத்திற்கு பாதை இல்லாமல் இருந்தது. அதற்கு பாதை வாங்கினால் தான் கிரையம் செய்ய முடியும் என்று சாத்தையாவும், பாலச்சந்திரனும் கூறினார்கள். சாத்தையாவே கிரைய ஒப்பந்த பத்திரத்தில் காட்டப்பட்ட இடத்திற்கு பக்கத்து இடத்தை பாதைக்காக எனது தம்பி கோகுலகண்ணன் பெயரில் வாங்கி கொடுத்தார். நான் மொத்தமாக ரூபாய் 35 இலட்சம் பாலச்சந்திரன், சாத்தையா மற்றும் தியாகராஜனிடம் கொடுத்துள்ளேன். மேற்படி

இடத்தை கிரைய பத்திரம் பதிவு செய்து கொடுக்க பாலசந்திரனிடம் கேட்டபோது இந்த வாரம், அடுத்த வாரம் என்று காலதாமதப்படுத்தி வந்தார். மேற்படி பணத்தை வட்டிக்கு தான் வாங்கி கொடுத்துள்ளேன். பணத்தை திருப்பி கொடுங்கள் என்று பாலசந்திரனிடம் கேட்டபோது அவர் கிரைய ஒப்பந்தத்தில் காட்டப்பட்ட இடத்திற்கு வரக்கூடாது என்றும், வந்தால் அங்கேயே வெட்டி புதைத்து விடுவேன் என்றும் பி.சி.ஆர் சட்டத்தில் புகார் அளிக்கப்படும் என்றும் மிரட்டினார்கள்.

பின்பு 26.08.2022ம் தேதி மாலை 5.00 மணியளவில் நான், எனது தம்பி கோகுலகண்ணன் மற்றும் சிவசுப்பிரமணியன் ஆகியோர் பாரதிநகர் ஆர்.டி.ஆர் காம்ப்ளக்ஸில் உள்ள எனது அலுவலகத்தில் இருந்தபோது, அங்கு ஆஜர் எதிரிகள் அவர்களுடன் இந்த வழக்கின் எதிரி முத்துமாரி ஆகியோார் வந்து கையில் கம்பு மற்றும் ஆயுதங்கள் வைத்து கொண்டு எங்களை மிரட்டினார்கள். பக்கத்தில் இருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள். பின்பு நான் கேணிக்கரை காவல் நிலையத்தில் புகார்மனு அளித்தேன். அதன்மீது காவல்துறையினர் விசாரித்தனர். பின்னர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன். பின்னர் பாலச்சந்திரன் என்பவர் கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை அவரது தங்கை ஜான்சி என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராத காரணத்தினால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

A AATHIYAN

Digitally signed by A AATHIYAN
Date: 2026.07.09 20:55:09 +0500